தொடர்ந்து வரும் மேற்காசியப் போரினால் ஏற்படும்

# பொருளாதாரத் தாக்கங்களைச் சமாளிக்க ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் யாவை?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி,ஆக.2-

திராவிட முன்னேற்றக் கழக மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம், 28 ஜூலை 2026 அன்று, மாநிலங்களவையில் தொடர்ந்து நீடித்து வரும் மேற்குறிப்பிட்ட போரினால் இந்திய பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கங்களை சமாளிக்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்றும் இறக்குமதி செலவு அதிகரித்துள்ளதை தடுக்க இயலுமா? என்றும் வர்த்தகத் துறை பாதிப்படைந்துள்ளதை அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணைய மைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

இந்தியப் பொருளாதாரச் சந்தை, உலக பொருளாதாரச் சந்தையுடன் இணைந்து செயல்பட்டு வருவதால் இந்திய ரூபாயின் மதிப்பு 8 சதவீதம் அளவிற்கு வீழ்ச்சி அடைந்துள்ளது என்றும் ஆனால் மொத்தப் பொருளாதார உற்பத்தி பெருக்கம் கடந்த 3 ஆண்டுகளில் 7 சதவீத அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்றும் தொழிற்துறை உற்பத்தி 5 சதவீத அளவிற்கு உயர்ந்துள்ளது என்றும் சிறுகுறு தொழில்களுக்கான கடன் வசதிகள் அதிகரித்துள்ளன என்றும் தடையில்லா வர்த்தக ஒப்பந்தங்கள் அதிகரித்துள்ளன என்றும் மாநிலங்களவையில் இணை யமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அந்நிய செலாவணியை அதிகரிக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்திய ரிசர்வ் வங்கி எடுத்துள்ளது என்றும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்பட்டு வருவதாகவும், இந்தோனேஷியா, மாலத் தீவுகள் மற்றும் மொரிஷியஸ் நாடுகளுடன் பல்வேறு வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும்,

மேற்காசியப் போரினால் ஏற்பட்ட வர்த்தக இழப்புகளை ஈடுகட்ட இரண்டு இலட்சம் கோடிகளுக்கும் அதிகமான அளவில் கடன் உறுதி திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் இந்திய பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்படவில்லை என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள், மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நாளை ஆர்ப்பாட்டம்!

# விவசாயத் தொழிலாளர் அணியினர் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்போம்!

## கழக விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் அ. சிவா வேண்டுகோள்!



தஞ்சை, ஆக. 2-

விவசாயத்தை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து நாளை (03.08.2026) தஞ்சையில் நடைபெறும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கழக விவசாய தொழிலாளர் அணியினர் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்பீர் என்று கழக விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் அ.சிவா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்தே மேகதாது அணை கட்டுவதில் கர்நாடக அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதற்காக கர்நாடக அரசு ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை கர்நாடக முதலமைச்சர் நேரில் சந்தித்து மேகதாது நிதியுதவி கோரி மனு அளித்தும், ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சரை நேரில் சந்தித்து மேகதாது திட்டத்துக்கு ஒப்புதல் வழங்க வலியுறுத்தியும், டெல்லியில் கர்நாடகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களுடன் கூட்டம் நடத்தி, மேகதாது அணை கட்டக் கடைமடை மாநிலங்களின் அனுமதி தேவையில்லை என நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஜல் சக்தி துறை தெரிவித்த பதிலை மேற்கோள் காட்டியும் பேசவைத்துள்ளது.

அதேபோல கர்நாடக அமைச்சர் ராமலிங்க ரெட்டி, கர்நாடக அரசின் டெல்லி பிரதிநிதி, கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் மேகதாது அணை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, ஊடகங்களிடம் தொடர்ந்து மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் எனவும், தமிழ்நாடு அரசின் அனுமதி தேவையில்லை எனவும் பேசி வருகிறார்.

ஆனால் இதற்கு மாறாக, இவ்விவகாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு தனது கடமை முடிந்து விட்டது என மவுனம் காத்து , தனது திரைப்ப டத்தின் வசூலை பெருக்க மார்க்கெட்டிங்க் செய்துவருகிறார்.

இந்தச் சூழ்நிலையில், காவிரியில் நமக்கு உரிய பங்கினை வழங்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டும், அதனை நிறைவேற்ற முடியாது என்று கர்நாடக மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் இன்னும் வாய் திறக்காமல் இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, மேகதாது விவகாரம் தொடர்பாக ஒரு தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தின் மூலம் வலியுறுத்தி இருக்கின்ற நிலையில், இந்த கர்நாடக பயணம் இதனை நீர்த்து போகச் செய்யாதா? என்ற கேள்வியும் எழுகிறது. இப்படி இந்த த.வெ.க. அரசைப் பொறுத்தவரையில் எந்தத் தகவல்களிலும் தெளிவு இல்லை, எதிலும் வெளிப்படைத்தன்மை இல்லை. எதற்கெடுத்தாலும் குழப்பம், எல்லாவற்றிலும் ஏமாற்றம். இதுவே இந்த அரசின் வழக்கமாக மாறியிருக்கிறது.

தனது திரைப்படம் கர்நாடகாவில் வெளியாவதில் சிக்கல் ஏற்படக் கூடாது என்பதற்காகவே முதலமைச்சர் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசாமல் அமைதி காக்கும்செயல் விவசாய மக்களுக்கு எதிரானது.

இந்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கையினை ஏற்று விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறியதை கண்டித்தும் டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும், பயிர்க்கடன் தள்ளுபடி மோசடியை கண்டித்தும் மேகதாது பிரச்சினையை கைக்கட்டி வேடிக்கை பார்ப்பது மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12 அன்று தண்ணீர் திறக்காதது காவிரிப் பிரச்சினையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்ட மறுப்பது கர்நாடக முதல்வரைச் சந்திக்கப் போவதாக அதிகாரமற்ற தகவல்களை உலவவிட்டு ஆழம் பார்ப்பது என தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகத்துக்கு மேல் துரோகம் செய்யும் விளம்பர மாடல் த.வெ.க. அரசைக் கண்டித்து நாளை (03.08. 2026-திங்கட்கிழமை) காலை 10.00 மணிக்கு தஞ்சை பனகல் கட்டிடம் அருகில் எதிர்க்கட்சித்தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வரவேற்புரையாற்றுகிறார். மனித நேய மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் எம்.ஹெச். ஜவாகிருல்லா, ம.ஜ.க.மாநிலத் தலைவர் மு.தமீமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ மாநிலச் செயலாளர் நெல்லை முபாரக், தி.க. மாநில பொது செயலாளர் இரா.ஜெயக்குமார், தே.மு.தி.க மாவட்டச் செயலாளர் பி.சிவநேசன், மக்கள் நீதி மையம் மாவட்ட அமைப்பாளர் தர்ம.சரவணன், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் கட்சி ஏ.ஆரோக்கியசாமி, கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், டி.ஆர்.பி.ராஜா, ஆர்.வைத்தியலிங்கம், எஸ்.எஸ்.சிவசங்கரன், சிவ.வீ.மெய்யநாதன், சி.வெ.கணேசன், முன்னாள் எம்.பி, செ. இராம லிங்கம், மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, விவசாய தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ச.முரசொலி, கே.என்.அருண் நேரு, கவிஞர் சல்மா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜித்து, பி.என்.மணி, உள்ளிட்ட டெல்டா மாவட்டத்தை சார்ந்த திருச்சி, புதுக் கோட்டை, திருவாரூர், அரியலூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், விவசாய சங்க நிர்வாகிகள் பங்கேற்று கண்டன உரையாற்ற உள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயத் தொழிலாளர் அணியினர் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் அ.சிவா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தருமபுரியில் புதிய சமூக வானொலி நிலையம் அமைக்கப்படுமா?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, ஆக. 2-

நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் சமூக வானொலி நிலையங்களின் (Community Radio Stations) செயல்பாடு, மக்கள் சென்றடைவு மற்றும் தாக்கம் குறித்து மத்திய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா? அவ்வாறு மேற்கொண்டிருந்தால் அதன் விவரங்கள் என்ன?

தற்போது தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் சமூக வானொலி நிலையங்களின் மாவட்ட வாரியான விவரங்கள், அவற்றை நிர்வகித்து வரும் கல்வி நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள் அல்லது பிற நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சேவைப் பயனாளர்களின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் தற்போது ஏதேனும் சமூக வானொலி நிலையம் செயல்பட்டு வருகிறதா?

அவ்வாறு செயல்பட்டு வந்தால், அதன் ஒலிபரப்பு எல்லை, ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் மற்றும் பயனாளர்கள் குறித்த விவரங்கள் என்ன? இல்லையெனில், தருமபுரி மாவட்டத்தில் புதிய சமூக வானொலி நிலையம் அமைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?

தமிழ்நாட்டில் சமூக வானொலி நிலையங்களை நிறுவுவதற்கும், அவற்றை வலுப்படுத்துவதற்கும் மத்திய அரசு வழங்கி வரும் நிதியுதவி, திறன் மேம்பாட்டு (Capacity Building) பயிற்சிகள் மற்றும் கொள்கை சார்ந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன?

கல்வி, வேளாண்மை, சுகாதாரம், பேரிடர் மேலாண்மை மற்றும் அரசின் நலத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், தருமபுரி உள்ளிட்ட போதிய சேவை வசதி இல்லாத மாவட்டங்களில் சமூக வானொலி நிலையங்களின் சேவையை விரிவுபடுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் தருமபுரி எம்.பி.ஆ.மணி

தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறையின் இணை அமைச்சர்

டாக்டர் எல். முருகனிடம் கேள்வி எழுப்பி உள்ளார்.

டிஜிட்டல் இந்தியாவை பாதுகாக்க பலப்படுத்தப்பட்ட சைபர் கவசம் CERT–In நடவடிக்கை –

# தகவல் சைபர் தாக்குதல்களை முறியடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஆக.2-

டெல்லியில் பாராளுமன்றத்தில் மாநிலங்களவை மழைக்கால கூட்டத்துடன் நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொண்ட நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் டிஜிட்டல் இந்தியாவை பாதுகாக்க பலப்படுத்தப்பட்ட சைபர் கவசம் CERT-In நடவடிக்கை மற்றும் தகவல் சைபர் தாக்குதல்களை முறியடிக்க தேசிய அளவில் எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கை என்ன? என கேள்வி ஒன்றை எழுத்துப் பூர்வமாக கேட்ப அதற்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் பதிலளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

AI சவால்களுக்கும் தயாராகும் இந்தியா சைபர் பாதுகாப்பில் புதிய வழிகாட்டுதல்கள் அமல்படுத்தப்பட்டன. இதனால் அரசு நிறுவனங்களுக்கு சைபர் பாதுகாப்பு மேலும் வலுப்படுத்தப்படுகிறது.

CERT-In நடவடிக்கைகள் குறித்து மாநிலங்களவையில் தகவல் சைபர் தாக்குதல்களை முறியடிக்க தேசிய அளவில் தீவிர நடவடிக்கை என்ன ? என கேள்வி எழுப்பினார்.

மேலும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பின் வருவனவற்றைத் தெரிவிப்பாரா:

அரசு நிறுவனங்கள் மீதான சைபர் தாக்குதல்கள் அதிகரித்துள்ளனவா? அப்படியென்றால், அது குறித்த விவரங்கள் என்ன;? இந்திய கணினி அவசரக்காலப் பதிலளிப்புக் குழு (CERT-In) சைபர் பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்தியுள்ளதா? இதற்கு ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு எழுத்துப் பூர்வமாக பதில் அளித்த மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா, நாட்டின் பயனர்களுக்கு வெளிப்படையான, பாதுகாப்பான, நம்பகமான மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய சைபர் வெளியை (cyberspace) உறுதி செய்வதை இந்திய அரசின் கொள்கைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. அரசு நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்கள் குறித்து அரசு நன்கு அறிந்து வைத்துள்ளது.

நாட்டில் சைபர் பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது; அவற்றில் அடங்குவன:

தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-இன் பிரிவு 70B-இன் விதிகளின் கீழ், சைபர் பாதுகாப்புச் சம்பவங்களுக்குப் பதிலளிப்பதற்கான தேசிய முகமையாக இந்திய கணினி அவசரக்காலப் பதிலளிப்புக் குழு (CERT-In) நியமிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நிறுவனங்கள், சேவை வழங்குநர்கள், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகளுடன் இணைந்து சம்பவங்களுக்கான பதிலளிப்பு நடவடிக்கைகளை CERT-In ஒருங்கிணைக்கிறது...

CERT-In-ஆல் செயல்படுத்தப்படும் தேசிய சைபர் ஒருங்கிணைப்பு மையம் (NCCC), சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கண்டறிய சைபர் வெளியை ஆய்வு செய்கிறது. நடவடிக்கை எடுப்பதற்காக, சம்பந்தப்பட்ட நிறு வனங்கள், மாநில அரசுகள் மற்றும் பங்குதாரர் முகமைகளுடன் இது தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறது.

அச்சுறுத்தல்களை முன் கூட்டியே தணிப்பதற்காக, பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுடன் பிரத்யேக எச்சரிக்கைகளைப் பகிர்ந்துகொள்ளும் தானியங்கி சைபர் அச்சுறுத்தல் நுண்ணறிவுப் பரிமாற்றத் தளத்தை CERT-In இயக்குகிறது. சைபர் ஸ்வச்சதா கேந்திரா (CSK) CERT-In-ஆல் வழங்கப்படும் குடிமக்கள் சார்ந்த சேவை இது; இது 'ஸ்வச் பாரத்' (தூய்மை இந்தியா) திட்டத்தின் தொலைநோக்குப் பார்வையை சைபர் வெளிக்கும் விரிவுபடுத்துகிறது.

இது 'பாட்நெட்' (Botnet) சுத்தம் செய்தல் மற்றும் தீங்கிழைக்கும் மென்பொருள் (Malware) பகுப்பாய்வு மையமாகச் செயல்படுகிறது; இது தீங்கிழைக்கும் நிரல்களைக் கண்டறியவும், அவற்றை அகற்றுவதற்கான இலவசக் கருவிகளை வழங்கவும் உதவுகிறது.

அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் உத்தரவுகள்

வேகமாக வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த இணைய அச்சுறுத்தல்களிலிருந்து டிஜிட்டல் உள்கட்டமைப்பைப் பாதுகாக்கும் நோக்கில், "டிஜிட்டல் உள்கட்டமைப்பில் AI-உதவியுடன் கூடிய பாதுகாப்பு ஓட்டைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைக் குறைப்பதற்கும் தடுப்பதற்கும் ஆன வரைபடம்" (Blueprint) ஒன்றை மே 2026-இல் CERT-In வெளியிட்டுள்ளது.

மேம்பட்ட AI-சார்ந்த அச்சுறுத்தல்களுக்கு எதிரான பாதுகாப்பை வலுப்படுத்த நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மேற்கொள்ள வேண்டிய விரிவான நடவடிக்கைகளை விவரிக்கும், "முன்னணி AI-சார்ந்த இணைய அபாயங்களை எதிர்கொள்ளுதல்" (Defending Against Frontier AI Driven Cyber Risks) என்ற தலைப்பிலான அறிவுறுத்தலை ஏப்ரல் 2026-இல் CERT-In வெளியிட்டுள்ளது.

மென்பொருள், வன்பொருள், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங் மற்றும் கிரிப்டோகிராபி (cryptography) ஆகியவற்றிற்கான 'பொருட்களின் பட்டியல்' (Bill of Materials - BOM) தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை ஜூலை 2025-இல் CERT-In வெளியிட்டுள்ளது.

ஜூன் 2023-இல், அரசு அமைப்புகளுக்கான தகவல் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களை CERT-In வெளியிட்டுள்ளது.

இவ்வழிகாட்டுதல்கள் தரவுப் பாதுகாப்பு, பிணையப் பாதுகாப்பு (network security), அடையாளம் மற்றும் அணுகல் மேலாண்மை, செயலிப் பாதுகாப்பு, மூன்றாம் தரப்பு அவுட்சோர்சிங், பாதுகாப்பு வலுவூட்டல் நடைமுறைகள், பாதுகாப்பு கண்காணிப்பு, பாதுகாப்புச் சம்பவ மேலாண்மை மற்றும் பாதுகாப்புத் தணிக்கை போன்ற அம்சங்களை உள்ளடக்கியுள்ளன.

பாதுகாப்பான மற்றும் நம்பகமான இணையச் சூழலை உறுதி செய்வதற்காக, தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-இன் பிரிவு 70B-இன் உட்பிரிவு (6)-இன் கீழ், சைபர் பாதுகாப்பு தொடர்பான நடைமுறைகள், தடுப்பு நடவடிக்கைகள், சைபர் சம்பவங்களுக்கான எதிர்வினை மற்றும் அவை குறித்த அறிக்கை அளித்தல் ஆகியவை அடங்கிய சைபர் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை CERT-In ஏப்ரல் 2022-இல் வெளியிட்டுள்ளது என மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா பதில் அளித்துள்ளார்.

தஞ்சையில் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம்!

# நாகை மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



நாகை. ஆக.2-

விவசாயிகளைத் தொடர்ந்து வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.கழகம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தஞ்சாவூரில் நாளை ஆகஸ்ட் 3 - திங்கள்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது இதில் நாகை மாவட்ட கழகத்தினர், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டும் என நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

சோபா மாடல் த.வெ.க. ஆட்சியில் விவசாயிகள் படும் துன்பமே அதற்கு சாட்சி என நாட்டின் முதுகெலும் பாய் விளங்கும் விவசாயிகளை வீதிகளில் போராட விட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர். தேர்தலுக்கு முன்பு: 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்கள் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்களில் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படும் என கூறிவிட்டு ஆட்சிக்கு வந்த பின் ரூ 50 ஆயிரம் வரை மட்டுமே கடன் தள்ளுபடி என்ற வெற்று அறிவிப்பை வெளியிட்டதை ஏற்காத விவசாயிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதால், 75 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டது. திமுக ஆட்சியில் இருந்த போது வாலைசுருட்டி கொண்டிருந்த கர்நாடகா அரசு தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்தே மேகதாது அணை கட்டுவதில் தீவிரம் காட்டி வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக, கர்நாடக முதலமைச்சரே தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக வரும் ஆகஸ்ட் 3ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடக செல்வதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், காவிரியில் நமக்கு உரியபங்கினை வழங்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டும், அதனை நிறைவேற்ற முடியாது என்று கர்நாடக மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் இன்னும் வாய் திறக்காமல் இருக்கிறார். த.வெ.க. சோபா மாடல் அரசைப் பொறுத்தவரையில் எந்தத் தகவல்களிலும் தெளிவு இல்லை, எதிலும் வெளிப்படைத்தன்மை இல்லை. கடந்த ஆண்டு 6.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்து சாதனை படைத்தது இந்தாண்டு மேட்டூர் அணை திறக்காததால் 14 இலட்சம் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுத் தவிக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் இருந்தாலும், இல்லையென்றாலும் எப்பொழுதும் விவசாயிகளின் நலனில் தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது. நிர்வாக திறமையற்ற த.வெ.க. அரசின் அலட்சியத்தால் குறுவை பொய்த்து போனதால் காவிரி டெல்டாவில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் விவசாயி களுக்கு ஏக்கர் ஒன்றுக்குக் குறுவை நிவாரணமாக ரூ. 25 ஆயிரம் வழங்க வேண்டும், காப்பீட்டுத் திட்டத்து க்கான பிரீமியம் தொகையை அரசே செலுத்தி முழுக் காப்பீடு கிடைக்க செய்திட வேண்டும்,0சம்பா சாகுபடிக்கான மறுமுதலீடாக விதை, உரம், பூச்சிக்கொல்லி உள்ளிட்ட இடுபொருட்கள் மானியமாக வழங்குதல் உள்ளிட்ட கோரிகளை வலியுறுத்தி நாளை 3ஆம் தேதி காலை 10.00 மணியளவில், தஞ்சாவூர், பனகல் கட்டடம் அருகில் கழகத்தின் எதிர்காலம், கழக இளைஞரணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதிஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெறுகிறது. டெல்டா மாவட்டங்களின் வாழ்வாதாரத்திற்காக நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் நாகை மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிகள், நகர் மன்ற பேரூராட்சி மன்ற தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள், கழகத்தினர்,விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள் பெரும் அளவில் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றி அடைய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.